**பள்ளிக்கல்வித்துறை– விழுப்புரம் மாவட்டம்**

**ஒப்படைப்பு டிசம்பர் – 2021**

10ஆம் **வகுப்பு** **தமிழ்** **மதிப்பெண்கள்**: 50

**பகுதி – 1 ( மொத்தமதிப்பெண்கள் - 8)** **4×2=8**

1. பாடல் அடிகளோடு தொடர்புடைய காப்பிய வகையினைக் கண்டுபிடித்து அதன் பெயர்களைக் எழுதுதல்.

மண்ணும் சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடித்தாழ வாழ்த்துவமே!

2. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்துதல்.
3. வசன கவிதை– விளக்கம்.
4. தொகைச் சொற்களை விரித்து, அதைத் தொடரில் எழுதுதல்

அ. தண்ணீர் குடி ஆ. தயிர்க்குடம்

**பகுதி – 2 (மொத்தமதிப்பெண்கள் -18)** **6×3=18**

5. வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றுதல்.

அ. **அறிந்தது , அறியாதது; புரிந்தது, புரியாதது; தெரிந்தது, தெரியாதது** இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.

6. வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுதல்.

அ. கலையரங்கத்தில் எனக்காகக் காத்து இருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

ஆ. ஊட்ட மிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

இ. நேற்று என்னை சந்தித்தார். அவர் என் நண்பர்.

7. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துதல்.

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"

8.சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுதல்

**(குலை, குவியல், கட்டு)**

அ. கல் - ஆ. பழம்- இ. புல் -

9. **பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துதல்**.

- உயிரைவிட சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் – உயிரினும் ஓம்பப் படும்
- ஊரின் நடுவில் நச்சுமரம் காய்த்தது போன்றது – நடு ஊருள் நச்சுமரம் காய்த்தற்று
- ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் - ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை

10. பாடலைப் பிழையின்றி எழுதுதல்.

**பாடல்** : 'தென்னன் மகளே!' எனத்தொடங்கும் அன்னை மொழியே பாடல்.

**பகுதி – 3 (மொத்த மதிப்பெண்கள் - 24)** **3×8=24**

11. தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைகுறிப்புகளை எழுதுதல்.

**தலைப்பு** - "தமிழின் சொல்வளமும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவையும்"

12. மேடைப்பேச்சு உருவாக்குதல்.

**தலைப்பு** – "மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலும் ஓர்ஒப்பீடு"

13. கருப்பொருள் சிதையாமல் எழுதுதல்.

**கதை** : " கோபல்லபுரத்து மக்கள்"